**கோபிசெட்டிபாளையம் நகராட்சி**

**29.08.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்**

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து வார்டுகளிலும் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒருமுறை பகுதி சபா கூட்டம் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இந்நகராட்சியில் பகுதி சபா கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்கள் கடிதம் ந.க.எண்.1401/2021/அ1, நாள். 17.05.2023 இல் பகுதி சபா மற்றும் வார்டு கமிட்டி கூட்டம் நடத்துவதற்கு தேவையான பதிவேடுகளை தி தூத்துக்குடி மாவட்ட ஹை– டெக் பிரிண்டர்ஸ் மற்றும் அலைடு சர்வீஸ் இன்டஸ்டிரியல் கூட்டுறவு சங்கம் லிமிடெட் கோவில்பட்டி அவர்களிடம் உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு வாங்கி பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் இதுவரை பகுதி சபா கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஒருகுயர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு வந்தது. ஆனால் அதற்கான பதிவேட்டில் பதிவு செய்யப்பட வில்லை. எனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் அறிவுரையின் படியும் மேற்படி கோவில்பட்டி அச்சகமானது கூட்டுறவு சங்க அச்சகம் என்பதாலும் பகுதி சபா மற்றும் வார்டு கமிட்டி கூட்டம் நடத்துவதற்கு 13 வகையான பதிவேடுகள் 30 வார்டுகளுக்கு ஒரு செட் வாங்கவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூபாய் 1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2195/2022/எப்1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 947**

2. இந்நகராட்சிகுட்பட்ட 30 வார்டுகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகள் 360 எண்ணிக்கைகள் உள்ளன. சோடியம் ஆவி விளக்குகளுக்கு உதிர் பாகங்கள் கிடைக்காததால் சரியாக பராமரிக்க இயலாத நிலையில் உள்ளது. மற்றும் மின்சாரம் சேமிக்கும் விதமாக சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக 90W LED லைட்டுகள் பொருத்த மதிப்பீடு தொகை ரூ. 40,36000/– ஆகும். 90W LED லைட்டுகள் பொருத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது நிதியில் பணியை மேற்கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 948**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிக்கு குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்றும் நிலையம் மூலம் வழங்கப்படுகிறது. அங்கு ராவாட்டர் மின்மோட்டர் 120HP மற்றும் கிளியர் வாட்டர் மின் மோட்டர் 180 HP இயக்கப்படுகிறது. ராவாட்டர் ஆற்று தண்ணீர் சுத்தம் செய்வதற்கு 6 எண்ணிக்கையில் பில்டர் மீடியா உள்ளது. சுத்தம் செய்த குடிநீரை Chemical முறையில் சுத்திகரிப்பு செய்வதற்கு குளோரின் பிளாண்ட் 2 எண்ணிக்கையில் உள்ளது.

Chemical Liqual Gas சிலிண்டர் மூலம் பொருத்தப்பட்டு Pre Chlorination மற்றும் Post Chlorination முறையில் குடிநீர் கலந்து நகர் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு தினம் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 20நாட்கள் வீதம் 2 சிலிண்டர்கள் தேவைப்படுகிறது. 6 மாத காலத்திற்க்கு 18 சிலிண்டர்கள் தேவைப்படுகிறது. 2024–2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் முடிவடைவதால் 2024–2025 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் மார்ச் வரை 6 மாத காலத்திற்கு குளோரின் சிலிண்டர் வாங்குவதற்கு மதிப்பீடு 4.75 இலட்சம் ஆகும். இதனை திருவாளர் நிகேதா எண்டர் பிரைசஸ், நடுப்பாளையம், சித்தோடு, அவர்கள் வழங்கி கொண்டு உள்ளார் அவர்கள் முன்பு கொடுக்கப்பட்ட அதே விலை புள்ளிக்கு குளோரின் சிலிண்டர் விநியோகம் செய்ய 6 மாத காலத்திற்கு ஒப்பு கொண்டதால் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந,க,எண்.673/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 949**

4. இந்நகராட்சியில் பொது நிதியில் கீழ்கண்ட பணிகளை செய்வதற்கு 14.08.2024 ஆம் தேதியில் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 237/2024/இ1)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி ராமர் எக்ஸ்டன்சன் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள Incinerator அதிநவீன Thermo censor அமைக்கும் பணி | 9,00,000 | M/s Kamaraj Soft Solution ஒப்பந்ததாரர் | -0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s Sense Soft Systems ஒப்பந்ததாரர் | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**நிபந்தனைகள்:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. Kamaraj Soft Solution அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண். 950**

5. இந்நகராட்சியில் மொச்சூர் வார சந்தையில் உள்ள ஆடுவதை கூடம் (Slaughter House) நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ROC No. 12079/2024/SS2 நாள். 22.07.2024 Capital Grant Fund & Operation and Maintenance Deficit Grant Fund 2024-25 திட்டத்தின் கீழ் பராமரிப்பு பணிகளை செய்வதற்கு 16.08.2024 ஆம் தேதியில் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 897/2024/இ1)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மொடச்சூர் வார சந்தையிலுள்ள ஆடுவதை கூடம் (Slaughter House) பராமரிப்பு பணிகள் | 6,00,000 | M/s D N Construction ஒப்பந்ததாரர் | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s Sanjay Electricals ஒப்பந்ததாரர் | 2.44 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. D N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணி திட்டப்பணி என்பதால், அவசர அவசியம் கருதி பணியினை முடிக்க கோரி உத்திரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு 1 . அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**3.பதிவுசெய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 951**

6. இந்நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் 2024-2025 கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்று 07.08.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது (ந.க.எண் 606/2023/இ1)

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|

| | | ரூ | ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்காக பால வித்யாலயா பள்ளியில் கூடுதலாக செய்யப்பட்ட பராமரிப்பு பணிகள் பேவர் பிளாக் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் | 9,80,000 | M/s VBN Builders ஒப்பந்ததாரர் | 0.00% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | M/s Vino Consturctions ஒப்பந்ததாரர் | 2.58% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்படி பணிகளில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே வழங்கியுள்ள M/s VBN Builders அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி கல்வி நிதி பணி என்பதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்றுக்கொள்ளப்பட்டது 3.ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண். 952**

7. இந்நகராட்சியில் பொது நிதி 2024-2025 கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 07.08.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண் 977/2024/இ1)

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறையில் பராமரிப்பு மற்றும் ஆணையாளர் குடியிருப்பு பராமரிப்பு பணிகள் | 3,00,000 | M/s. Sanjay Electricals ஒப்பந்ததாரர் | 0.13% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s V.Thangaraj ஒப்பந்ததாரர் | 0.16% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்படி பணிகளில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே வழங்கியுள்ள M/s VBN Builders அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி கல்வி நிதி பணி என்பதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3. ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.** 953

8. இந்நகராட்சியின் மூலம் இயங்கி வரும் மூன்று நுண் உரமாக்கல் மையங்கள், ஒரு உயிரி எரிவாயு கூடம், இரண்டு வளமீட்பு மையங்கள் மற்றும் ஒரு எரியூட்டும் இயந்திரம் போன்ற செயலாக்க மையங்களின் பணிகள் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 33552/2022/EA2 – SWM – 14 நாள். 10.01.2023 ம் தேதியில் வெளிக்கொணர்வு முறைக்கு நிர்வாக அனுமதி பெற்றபோது 88 நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிந்து வந்த நிலையில் ஜனவரி 2023 லிருந்து இன்று வரை 16 தூய்மைப் பணியாளர்களின் பணியிடங்கள் ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக காலியாக உள்ளது. எனவே இந்நகராட்சிக்கு தேவைப்படும் 16 தூய்மைப் பணியாளர்களை சுய உதவிக்குழு முறை மூலமாகவோ வெளிப்பணி ஒப்படைப்பு முறை மூலமாகவோ குறைந்தபட்ச கூலி சட்டத்தின் படியும் அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2007 ன் படியும் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியின் மதிப்பீட்டில் ஓராண்டு காலத்திற்கு எடுத்து பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் பின்வரும் விபரப்படி கணக்கிடப்பட்டுள்ளது.

| | | Per day Salary | No. of Days | No. of Workers | Grand Total |
|---|---|---|---|---|---|
| Rs.638 x 365 Days x 16 Workers | = | 638/- | 365 | 16 | 37,25,920/- |
| EPF 13% | = | | | | 4,84,370/- |
| ESI 3.25% | = | | | | 1,21,092/- |
| Admin Cost 5% | = | | | | 1,86,296/- |
| Group Personal Accident Insurance Policy Rs.1250 x 16 No's | = | | | | 20,000/- |
| Safety equipment like reflective jacket, gloves, mask, helmet etc Rs.2000 x16 No's | = | | | | 32,000/- |
| | | | | | 45,69,678 |
| | | | | Rounded Off | 45.70 இலட்சம் |

மேற்காணும் விபரப்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் நிர்வாக அனுமதி பெற்ற பின்பு ஏற்படும் காலியிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவ்வப்போது கூடுதலாக மேற்காண் விபரப்படியான தினக்கூலி விகிதத்தில் பணியாளர்களை வெளிப்பணி ஒப்படைப்பு முறை மூலம் எடுத்து கொள்ளவும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் மூலம் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி விகிதத்தின்படி கூலி நிர்ணயம் செய்து வழங்கிடவும் அதற்காகும் ஓராண்டு காலத்திற்கான செலவினம் மொத்தம் ரூ.45.70/- இலட்சத்திற்கும் இப்பணியினை மூன்றாண்டு காலத்திற்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1027/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 954**

9. இந்நகராட்சியின் மூலம் KNMT திட்டத்தின் கீழ் நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள " **அறிவு சார் மையம்** " மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் காணொளி காட்சி மூலம் 12.08.2024 அன்று காலை திறந்து வைக்கப்பட்டது. மேற்படி அறிவு சார் மையத்திற்கு தேவையான பொருட்களான Wall Clock - 2 No's, Dustbin -4 No's, Mat – 6 No's, Broom Stick – 4 No's, Mop – 2 No's, Bucket – 3 No's, Mugs – 3 No's உள்ளிட்ட Stationery பொருட்களை அவசர அவசியம் கருதி உள்ளூர் கடையில் 11.08.2024 ம் தேதி ரூ.2716/- செலவினத்தில் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்செலவினம் துப்புரவு ஆய்வாளர் திரு.B.K.சௌந்தரராஜன் அவர்களால் செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையினை அவருக்கு திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1391/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 955**

10. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் (4D) NO.2 நாள்.26.02.2023ன் படி அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியத்தொகை ரூ.250/- லிருந்து ரூ.325/- ஆக உயர்த்தி வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.972/2020/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியத் தொகை ரூ.250/- லிருந்து ரூ.325/- ஆக உயர்த்தி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 956**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. Trustus Out Sourcing Solutions Pvt Ltd, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Chennai – 91 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு முறை மூலம் பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.08.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளில் தூய்மைப் பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.09.2024 முதல் 30.11.2024 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு 71 பள்ளி வேலை நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 631/- என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.8.52/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1830/2023/எச் )

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 957**

12. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள வாகனங்களுக்கு 2024 - 2025 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய சாலை வரி, பசுமை வரி, பதிவு சான்று புதுப்பித்தல் கட்டணம் மற்றும் காப்பீடு புதுப்பித்தல் கட்டணம் போன்றவற்றை உரிய நேரத்தில் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு செலுத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 3.00/- இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 1186 /2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. இந்நகராட்சி வாகனங்கள் TN 36 BA 5506, TN 36 AJ 2136 ஆகிய வாகனங்களுக்கு காப்பீடு கட்டணம் ரூ.29,158/- செலுத்தியுள்ளதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. 3. ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண். 958**

13. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள Frond End Loader TN36AJ2139 வாகனத்தின் முன்புறம் பொருத்தப்பட்டுள்ள இரும்பு பக்கெட் மிகவும் தேய்ந்து டோசிங் செய்ய முடியாத அளவில் பழுதடைந்து உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு 27CFT கொள்ளளவு கொண்ட லோடர் பக்கெட் புதியதாக பொருத்தி அதற்கான புஷ் , பின் போன்றவற்றையும் புதியது பொருத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.85,000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1360/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 959**

14. இந்நகராட்சி பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய இனத்தவர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகை தலா ரூ.5000/-ம் வழங்கிட அரசு ஆணை நிலை எண்.105 நாள். 19.10.2020 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை பயனாளிகளுக்கு 2024-2025 ஆம் நிதியாண்டில் உடன் வழங்கவும் அதற்காகும் செலவினம் ரூ.2.50/- இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2749/2020/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. ஈமச்சடங்கு தொகையினை பொதுநிதியிலிருந்து விடுவித்த பின்பு மானியம் வரப்பெற்றவுடன் சரிகட்டி கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 960**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் கொசுவினால் ஏற்படும் நோய்களை தடுக்க கொசு தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் Temephos Emulsifiable 50% EC மற்றும் Pyrethrum 2% Extract போன்ற மருந்துகளை M/s. Tamil Nadu Multipurpose Indico Serve, Thiruchirappali - 620008 அவர்களிடம் கொள்முதல் செய்து கொள்ள ஏற்கனவே மன்ற தீர்மான எண்.839 நாள். 28.06.2024 ல் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தில் கொசு மருந்து விநியோகம் இல்லாததால் அரசு நிறுவனமான Tamil Nadu Medical Services Corporation Ltd, (TNMSC) Chennai – 600 008 நிறுவனம் அங்கீகரித்துள்ள M/s.Agri Biochem Pvt Ltd, Ganganagar, Madhyamgram, Kolkata – 700 132 அவர்களிடம் TNMSC நிறுவனம் நிர்ணயித்துள்ள விலை விகிதத்தில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 959/2024/எச் 1)

| வ.எ | மருந்தின் பெயர் | TNMSC நிறுவனம் நிர்ணயம் செய்துள்ள விலை விகிதம் | தேவைப்படும் மருந்தின் அளவு |
|---|---|---|---|
| 1 | Pyrethrum 2% Extract | ரூ.844 + 18% GST | 130 லிட்டர் |
| 2 | Temephos Emulsifiable EC | ரூ.550 + 18% GST | 100 லிட்டர் |

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 961**

16. இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகள் (சிமெண்ட் ஆலைகளின் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு உகந்த) அனைத்தும் இந்நகராட்சியின் RRC மையத்தில் சேமித்து வைத்து கழிவுகள் அவ்வப்போது தேக்கமின்றி திடக்கழிவு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 -ன் படி சிமெண்ட் ஆலைகளுக்கு வாகன விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரான M/S. Explosive Enter Prises, Gobichettipalayam அவர்களிடமிருந்து ரூ.1680/- என்னும் விலை விகிதத்தில் (ஒரு டன் பிளாஸ்டிக்களை அனுப்பிட) சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை பெற்று சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி அப்புறப்படுத்திட நகர்மன்ற தீர்மான எண்.729 நாள்.29.12.2023 ன் படி செலவினத்திற்கு அனுமதி பெறப்பட்டு பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஜீலை 2024 வரையிலும் இப்பணியை மேற்கொள்ளுவதற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அறிவுறுத்தலின் படி 29.07.2024 ஆம் தேதி முதல் 19.08.2024 ம் தேதி முடிய 189.125 டன் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிக்கும் எதிர் வரும் 31.08.2024 ம் தேதி வரையிலும் மேற்குறிப்பிட்ட

ஒப்பந்ததாரரின் வாகனம் மூலம் கழிவுகளை அனுப்பி வைக்கவும் அதற்காகும் செலவினம் ரூ.3.75/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2861/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுசுகாதாரபிரிவினரால் திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் கழிவுமேலாண்மை விதிகள் 2016 –ன்படி வசூலிக்கப்படும் அபராதகட்டணங்களின் தொகை அல்லது திடக்கழிவுபயனீட்டாளர் கட்டணத்திலிருந்து (Solid Waste Management User Charge)செலவு செய்து கொள்ளவும், அத்தொகையில் இருப்புஇல்லாத நேர்வில் நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 962**

17. இந்நகராட்சியின் எரியூட்டும் இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள தண்ணீர் மோட்டாருக்கும் Shreading Machine க்கும் MCC மையத்தின் எலக்ட்ரிக் Box லிருந்து செல்லும் மின்சார ஒயர்களை மூன்று இடங்களில் Post அமைத்து தரையில் ஒயர்கள் படாதவாறு தேவைப்படும் ஒயர்களைக் கொண்டு எலக்ட்ரிக் வேலைகள் செய்யும் பணிக்கு 20.08.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1217 /2024/எச்1)

| வ.எ | நிறுவனம் விபரம் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Fin air system,<br>72, Ranganatha street,<br>Venkitapuram,<br>Coimbatore . | ரூ. 11750/–<br>+<br>( GST 18%) |
| 2 | M /s. Eco Environs Solutions,<br>20/2, Indira Ganthi Street,<br>Palayapalayam,<br>Erode. | ரூ.11500 /–<br>+<br>( GST 18%) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2– ல் கண்டுள்ள M /s. Eco Environs Solutions, 20/2, Indira Ganthi Street, Palayapalayam, Erode என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 963**

18. இந்நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்கள், ரோடுகள் போன்றவற்றில் அவ்வப்போது வளரும் புல்செடிகளை அகற்ற நான்கு புல் அறுக்கும் இயந்திரங்கள் (Bush Cutter Machines) கொள்முதல் செய்யும் பணிக்கு 20.08.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ | நிறுவனம் விபரம் | ஒரு புல் அறுக்கும் இயந்திரத்தின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Vijaya Agro Agencies,<br>349, Nehru Street, Ram Nagar,<br>Coimbatore – 641 009 | ரூ.17850 /–<br>( Including GST 1%) |
| 2 | M /s. Sun Light Electronics<br>230/24C Sathy Main Road,<br>Gobichettipalayam – 638 452 | ரூ.17700 /–<br>(Including GST 1%) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2– ல் கண்டுள்ள M /s. Sun Light Electronics, 230/24C Sathy Main Road, Gobichettipalayam – 638 452 என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1214 /2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 964**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் KNMT திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் ஆண்டு புதியதாக கட்டப்பட்ட அறிவுசார் மையத்திற்கு Care Taker பணியிடத்தினை அமைக்க தெரிவிக்கப்பட்டதில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் வெளிக்கொணர்வு முகமை மூலம் நிரப்பி Sankar Labour Contract நிறுவனம் மூலம் பணியாளரை பணியமர்த்தப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி (ந.க.எண் 2878/2023/பி1 நாள் 22.01.2024)அறிவுசார் மையத்தில் பணிபுரியும் பணியாளருக்கு ஊதியம், தினசரி செய்தித்தாளின் கட்டணம் மற்றும் இதர செலவினம் மேற்கொள்ளவும், 2024–2025 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–இலட்சம் தேவைப்படுகிறது. இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது (ந.க.எண் 897/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 965**

20. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 07.08.2024 ஆம் தேதிய காணொளி காட்சி கூட்டத்தில் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப்பணியின் கீழ் செயல்படும் நுண் உரமாக்கல் மையங்கள், வளமீட்பு மையங்கள், உயிரி எரிவாயு கூடம் மற்றும் எரியூட்டும் இயந்திரம் அமைந்துள்ள இடங்களில் தினமும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை கண்காணிக்க ஏதுவாக CCTV Camera எதிர்வரும் 31.08.2024 க்குள் பொருத்த வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே இந்நகராட்சியில் உள்ள கீழ் காணும் செயலாக்க மையங்களில் CCTV Camera பொருத்தி பணிகளை கண்காணிக்க வேண்டியுள்ளது. (ந.க.எண். 1436/2024/எச்1 )

1. MCC 3 இடங்கள் – 3 CCTV Camera
2. வளமீட்பு மையம் 2 இடங்கள் – 2 CCTV Camera
3. உயிரி எரிவாயு கூடம் 1 இடம் – 1 CCTV Camera
4. எரியூட்டும் இயந்திரம் 1 – CCTV Camera

மேற்காணும் விபரப்படி CCTV Camera பொருத்தி சிம்கார்டு மூலம் ஆன்ராய்டு மொபைல் போனில் கண்காணிக்கவும் அதற்காகும் செலவினம் ரூ.1.00/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 966**

21. இந்நகராட்சி நகரின் மத்திய பகுதியில் செல்லும் கீரிப்பள்ளம் ஓடையில் படர் தாமரைகள், நாணல் செடிகள் உள்ளிட்ட செடி கொடிகள் ஓடை முழுவதும் படர்ந்து உள்ளதால் ஓடையில் செல்லும் தண்ணீர் ஆங்காங்கே தேங்கியுள்ளது. தற்பொழுது மழை காலம் துவங்கியுள்ளதால் எதிர் வரும் காலங்களில் மழை நீரும் மேற்படி ஓடையில் வரும் பொழுது ஓடையில் உள்ள செடி கொடிகளால் அடைப்பு ஏற்பட்டு கரையோரங்களில் உள்ள பகுதிகளுக்கு மழை நீர் செல்ல வாய்ப்புள்ளது. இதனை தடுக்கும் விதமாக நாகர்பாளையம் ரோட்டில் உள்ள பாலத்தில் இருந்து பாரியூர் ரோடு, நஞ்சகவுண்டன்பாளையம் செல்லும் சாலையில் உள்ள பாலம் வரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கீரிப்பள்ளம் ஓடையினை ஹிட்டாச்சி (Hitachi) வாகனம் கொண்டு படர் தாமரைகள், நானல் செடிகள் உள்ளிட்ட செடி கொடிகளை ஒதுக்கி ஓடையில் தண்ணீர் சீராக செல்ல கரையின் இருபுறமும் அப்புறப்படுத்தி பணி மேற்கொள்ள மணி நேர கணக்கில் (On hours basis) ஹிட்டாச்சி (Hitachi) வாகனத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டி உள்ளது. இதற்கு ரூ.3.00/– இலட்சம் ஆகும் என

மதிப்பிடப்படுகிறது. இப்பணிக்கு மொத்தம் செலவாகும் தொகையில் உள்ளூரில் உள்ள பொது சேவை செய்யும் சங்கங்கள் (NGO's) இப்பணியினை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு வழங்கும் சமுதாய பொறுப்புணர்வு நிதி (CSR Fund) போக மீதம் வழங்க வேண்டிய தொகையினை இப்பணிக்கு செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 01437/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 967**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 5 ராமர் எக்ஸ்டன்சன் 5 தெருவிலுள்ள சிறுமின்விசை பம்பு சின்டெக்ஸ் தொட்டி அமைந்துள்ள மேடை ஒரு புறமாக கீழே இறங்கி சாய்ந்த நிலையில் உள்ளது. மேலும் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் நிலை உள்ளது. எனவே, புதிதாக மேடை அமைத்து தண்ணீர் வசதி செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.35,000/–ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 469/2024/இ2)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 968**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் ஜெயராம் நடுநிலைப்பள்ளி நகராட்சி நடுநிலைப்பள்ளி (டவுன்), வேங்கம்மையார் நகராட்சி துவக்கப்பள்ளியில் உள்ள மாணவ மாணவிகளுக்கு புதிதாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (70LPH) அமைத்து குடிநீர் வசதி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ஒன்றுக்கு ரூ.40,000–வீதம் மூன்று எண்களுக்கு ரூ.1,20000/–ஆகும். பள்ளி குழந்தைகள் நலன் கருதி மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 465/2024/இ2)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 969**

24. நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய TNUDF கடை எண். 01 மற்றும் 02 (வரி விதிப்பு எண். 057/951 மற்றும் 057/952 ) கொண்ட கடைகளுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரையில் திரு.எஸ், கணேசன் என்பவருக்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது, மேற்படி இரண்டு கடைகளுக்கு, 01.04.2024 ஆம் தேதி முதல் 15% வாடகை உயர்வு செய்து புதுப்பிக்கப்பட வேண்டும்,

இந்நிலையில் வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 20,08.2024 ம் தேதிய குறிப்பில், மேற்படி கடைகளுக்கு 01.04.2024 ஆம் தேதி முதல் 15% வாடகை உயர்வு செய்து புதுப்பிக்க கோரியும் நாளது வரை உரிமம் புதுப்பிக்க முன்வராததாலும் வாடகை செலுத்தாததாலும் புதிய பேருந்து நிலைய TNUDF கடை எண். 01 மற்றும் 02 (வரி விதிப்பு எண். 057/951 மற்றும் 057/952) ஆகிய இரண்டு கடைகளுக்கு திரு.எஸ். கணேசன் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.08.2024 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும், 01.09.2024 ஆம் தேதி முதல் மேற்படி இரண்டு கடைகளுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 970**

25. நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண். 26 (வரி விதிப்பு எண். 057/842 கொண்ட கடைக்கு 01.042023 முதல் 31.03.2026 வரையிலும் திரு. பாலவெங்கடேஷ் என்பவருக்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் பழைய பேருந்து நிலையம் இடித்து புதிய வணிக வளாகம் கட்டுவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தனது கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக தனது 31.07.2024 ஆம் தேதிய மனுவில் தெரிவித்துள்ளார்.

உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 06.08.2024 ம் தேதிய குறிப்பில், மேற்படி பழைய பேருந்து நிலைய கடை எண். 26 கடைக்கு திரு.பாலவெங்கடேஷ் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை மன்றத்தின் அனுமதி பெற்று 31.07.2024 ஆம் தேதியுடன் ரத்து செய்து, 01.08.2024 ஆம் தேதி முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின்படி, பழைய பேருந்து நிலைய கடை எண். 26 (வரி விதிப்பு எண். 057/842) கடைக்கு திரு, பாலவெங்டேஷ் என்வருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.07.2024 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும், 01.08.2024 ஆம் தேதி முதல் மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 971**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 01.03.2024 ஆம் தேதியன்று பதிமூன்றாவது முறையாக முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற கடைகள் :

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.03, A.05, A.06, A.08, A.11, A.20, G.1 மற்றும் கடை எண். G.2 (8 கடைகள்

மேற்படி 8 கடைகளுக்கு நடைபெற்ற முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஒரே ஒரு கடைக்கு மட்டும் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். விபரம் பின்வருமாறு.

| வ.எண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.05** | திருமதி.செல்வி<br>க/பெ.சரவண குமார்,<br>3, ராமர் எக்ஸ்டென்சன் – 7,<br>கோபிசெட்டிபாளையம் 638452<br>9994687834 | **ரூ.15,150/–** |
| | | திரு.எஸ். சபரிநாதன்,<br>த/பெ.ஜி. எம். சுப்பிரமணியம்<br>8, ராமர் எக்ஸ்டென்சன் – 6<br>கோபிசெட்டிபாளையம் 638452<br>9789733873 | ரூ.15,100/– |

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.05 க்கு, திரு. எஸ். சபரிநாதன் என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,100/– ஐ விட கூடுதலாக ரூ.50/– சேர்த்து, திருமதி. செல்வி என்பவர் ரூ.15,150/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார்,

உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 14.08.2024 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை IUDM கடை எண். A05 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,150/– குறிப்பிட்டுள்ள திருமதி. செல்வி என்பவருக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, கட்டுமான பணிகள் முடிவடைந்தபின் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்கள் குறிப்பின்படி, தினசரி சந்தை IUDM கடை எண். A.05 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.15,150/– குறிப்பிட்டுள்ள திருமதி. செல்வி என்பவருக்கு தினசரி வணிக வளாக கட்டுமான பணிகள் முடிவடைந்தபின், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள ஏழு கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 1272/2023/அ3 )

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 972

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண்16 பகுதிகளை பாரியூர் ரோடு வீராசாமி வீதி பகுதியில் நெடுஞ்சாலை துறையினரால் சாலைகள் இருபுறமும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி பணி மேற்கொள்ளும் போது சாலையின் இருபுறமும் உள்ள குடிநீர் வினியோக குழாய் மற்றும் குடிநீர் இணைப்புகளையும் சுமார் 300 மீட்டர் நீளத்தில் ஆங்காங்கே சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால் பாரியூர் ரோடு வீராசாமி வீதி பகுதியில் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, பழுதடைந்த குடிநீர் வினியோக குழாய் மற்றும் வீட்டு குடிநீர் இணைப்புகள் புதிதாக அமைக்க வேண்டியுள்ளது. மேலும் கோபி சத்தி சாலையல தென்புறத்தில் ராம் நகர் சந்திப்பிலிருந்து நஞ்சப்பா வீதி வரையும், புதிய ஆஸ்பத்திரி வீதி சந்திப்பில் இருந்து, அண்ணாபாலம் வரையிலும் குடிநீர் வினியோக குழாய் மற்றும் வீட்டு குடிநீர் இணைப்புகள் சேதமடைந்துள்ளது. எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். அச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 973

28. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சீராக குடிநீர் வழங்குவதற்கு IUDM 2018–19 திட்டத்தின் கீழ் 52.80 கோடி மதிப்பீட்டில் அரசு அனுமதி பெறப்பட்டு (A.S. No:G.O.Ms.No.82/MAWS/MA2 Dept Date:23.08.2018) தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு( T.S.No: CE/681/2018–19 Dt:.20.12.2018) ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது Zone 1 ல் 1 மற்றும் 2 DMA , Zone 2 பகுதி Zone .3,4,5,6,7,8,9 மற்றும் 10 புதியதாக அமைக்கப்பட்ட குழாய்கள் மூலம் சீரான அழுத்தத்தில் குடிநீர் வழங்கப்படுகிறது.மேலும் TWIC மூலம் வடிவமைக்கப்பட்ட பகிர்மான குடிநீர் குழாய் மூலம் சீரான குடிநீர் வழங்க முடியாத காரணத்தால் சில இடங்களில் புதியதாக வால்வுகள் மற்றும் புதியதாக குழாய்கள் அமைக்கப்பட்டு

குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் வீணாக்கப்பட்ட காலியிடங்களில் உள்ள குடிநீர் குழாய்கள் நிரந்தர அடைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Zone 1 இல் DMA 1 மற்றும் 2 ல் புதிய குடிநீர் குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்ற 8 எண்ணிக்கை DMA ல் சீரான குடிநீர் அளிக்கப்பட முடியவில்லை. TWIC மூலம் வடிவமைக்கப்பட்ட பகிர்மான குடிநீர் குழாய் அமைப்பின் மூலம் சீரான குடிநீர் வழங்க இயலாத காரணத்தால் வேறு நிறுவனம் மூலம் மறு வடிவமைக்கப்பட்டு தேவைப்படும் இடங்களில் புதிதாக பகிர்மான குழாய் மற்றும் வால்வுகள் அமைத்து சீரான குடிநீர் வழங்கவும் மேலும் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கவும் .

மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டு கூடுதலாக செய்யப்பட்ட 33 இனத்தின் தொகை ரூ. 42310342.00 மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாமல் புதிதாக செய்யப்பட்ட 70 இனத்தின் தொகை ரூ. 33345558.00

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரைப்படி ஒப்பந்த புள்ளி மதிப்பை விட குறைவாக பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1435/2015/இ1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 974**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சி புதிய குடிநீர் திட்டம் (IUDM – 2018–2019) ன் கீழ் பணிகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கையில் (DPR) படி 19491 எண்கள் குடிநீர் இணைப்புகள் வழங்க அனுமதிக்கப்பட்டு அதில் 16700 இணைப்புகள் வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2791 எண்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இந்நகராட்சியில் 21915 வரிவிதிப்புகள் உள்ளது. 21.08.2024 அன்று நடைபெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆய்வு கூட்டத்தில் முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கையின் படி அனைத்து குடிநீர் இணைப்புகளும் அமைக்கப்பட்டு 30.09.2024 கேட்பு எழுப்பப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர் மேலும் அனைத்து வரிவதிப்புகளும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து வரிவிதிப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு ஏற்படுத்திடவும் அதற்கான வைப்பு தொகை ரூ.4000.00 யை 10 தவணைகளில் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் திருப்பூர், அவர்கள் அறிவுரை படி குடிநீர் கட்டணம் வாயிலாக வருவாய் அதிகபடுத்தவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படத்தவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1435/2015/இ1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்

**அலுவலக குறிப்பு . பதிவுசெய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண். 975**

30. நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேற்கூரையுடன் கூடிய 80 கடைகள் மற்றும் 8 இருக்கைகள் கொண்ட கழிப்பிடம் ஆகியவை பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர அக்கடைகளுக்கு தினசரி வாடகைத் தொகை கடை ஒன்றிற்கு ரு,250./ நிர்ணயம் செய்ய உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வருவாய் ஆய்வர் தனது 03,07,2024 ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார், மேலும் வருவாய் ஆய்வர் குறிப்பில் மேற்படி வாரசந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேற்கூரையுடன் கூடிய 80 கடைகளுக்கு கடை ஒன்றின் வாடகை ரூ,250./ மற்றும் வாரசந்தையில் உள்ள கழிப்பறைக்கு சிறுநீர்கழிக்க ரூ 2./ ம் மலம் கழிக்க ரூ 4./ (ஒரு நபருக்கு) என நிர்ணயம் செய்து நகர்மன்ற தீர்மான எண்.896, நாள்.08.07.2024, இல் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது பேரறிஞர் அண்ணா வியாபரிகள் சங்கம் தினசரி மார்க்கெட் தலைவர் அவர்கள் மொடச்சூர் வாரச் சந்தை வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ள வாரச்சந்தையானது, கடைநிலை வியாபரிகளின் வாழ்வதாரமாக உள்ளதாலும் மேலும் வாரச்சந்தையானது நகர்புறத்தின் எல்லையில் உள்ளதால் பொதுமக்களின் வரத்து குறைவாக உள்ளது. எனவே வாரச்சந்தையின் கடைக்கு நிர்ணயம் செய்யும் வாடகை தொகை வியாபாரிகளின் நலனை கருத்தில் கொண்டு கடை ஒன்றின் வாடகை ரூ.70 என நிர்ணயம் செய்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1014/2021/அ3)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.**

**அலுவலக குறிப்பு வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி கடை ஒன்றின் வாடகை ரூ.250/– லிருந்து ரூ.150/– ஆக குறைத்து நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது**
**மன்றத்தீர்மான எண்.** 976

(ஒப்பம்)–என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி